இப்படிப்பட்ட கடும் தண்டனை அளிக்கவேண்டுமா? அவனை பைத்தியக்காரன் என்று கொண்டு வந்து வைத்துக்கொண்டு இருக்கிற காரணத்தாலே இதிலே எனக்கு நிரம்ப சந்தேகம் இருக்கிறது. எனவே அரசாங்கம் துணிவோடு இந்தப் பிரச்னையில் ஒரு பேனல் ஆப் டாக்டர்ஸ் போட்டு, அதைப் பற்றி விசாரிக்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கிட்டத்தட்ட கேள்வி நேரம் போலவே இதை ஆக்கியிருக்கிறார்கள். அவர்கள் இப்போது கடைசியாகச் சொன்ன விவரங்களைப் பற்றி எந்தவிதமான தகவலும் சொல்லமுடியாத சூழ்நிலை எனக்கு இருக்கிறது. ஏனென்றால் அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, அப்படியானால் அதைப் பற்றி எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தகவல் பெற்று அறிவிக்க வேண்டும். அவர் பைத்தியம் என்பதற்கு டாக்டர் சர்ட்டிபிகேட் இல்லாமல் சேர்க்கப்பட்டு இருந்தால் எவ்வாறு அவர் அப்படிச் சேர்க்கப்பட்டார் என்பது புதிராக இருக்கிறது. இது மிகவும் முக்கியமான பிரச்னையாக இருப்பதால், அரசாங்கம் எவ்வளவு சீக்கிரம் இதைத் தெளிவு படுத்தமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் அதைத் தெளிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திரு. சங்கரய்யா கொடுத்த யோசனை நிச்சயமாக அரசு கவனத்தில் கொள்ளும்.

(3) உரிமைப் பிரச்னை.—

சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு, மேலவை பார்வையாளர் மாடத்தில் தனி இடம் ஒதுக்கப்பெறாதிருப்பது குறித்து—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்னை. பேரவை விதி 184 ன் கீழ்....

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அடுத்த பிரச்னைக்குப் போய்விட்டேன். உட்காருங்கள். பேரவை விதி 184ன் கீழ் திரு. ஒ. சுப்பிரமணியன் ஒரு உரிமை மீறல் பிரச்னை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

979 மார்ச் 8]

[முற்பகல் 10–10.]

திரு. ஒ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, என்னுடைய உரிமைப் பிரச்னை—அசெம்பிளி காலரியில் மேலவை உறுப்பினர்களுக்கு தனியிடம் கொடுத்து நடவடிக்கைகளை கவனிக்க மரியாதை செய்யப்பட்டிருக்கும்போது, மேலவை நடவடிக்கைகளை கவனிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பினால் லாபியில் வெளியில்தான் உட்கார வைக்கப்படுகிறார்கள். சபை உள்ளே மரியாதையுடன் உட்கார்ந்து நடவடிக்கைகளை கவனிக்க அங்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனியிடம் ஒதுக்கப்படவில்லை. இது இம்மன்ற உறுப்பினர்களின் கவுரவத்தையும் மரியாதையையும் பாதிப்பதால், இது சம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமை பாதிக்கப்படுவதால், இவ்விஷயத்தை உரிமைக் குழுவிற்கு அனுப்பி பரிசீலனை செய்து முடிவெடுக்க அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, இது தனி உறுப்பினரின் உரிமையை மட்டுமல்லாது, இப்பேரவையின் உரிமையே பாதிக்கப்படுகிறது. நீண்ட நாட்களாகவே இக்குறைபாடு இருந்து வருகிறது. மேலவை உறுப்பினர்களின் அந்தஸ்தை உத்தேசித்து, பல்வேறு மாடங்கள் இருந்தாலும் மேலவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு தனி மாடம் ஏற்படுத்தி கவுரவப்படுத்தியுள்ளோம். இந்நிலையில் இம்மன்ற உறுப்பினர்களுக்கு மேலவை நிகழ்ச்சிகளை நேரில் கவனிக்க சபையின் உள்ளே தனியிடம் ஒதுக்காது லாபியிலேயே, வெளியேயிருந்து யார் பேசுகிறார்கள், எந்த அமைச்சர் பதில் சொல்கிறார் என்பதை அறிய முடியாமல், ஏதோ ரேடியோவில் நிகழ்ச்சிகளைக் கேட்பது போல் பார்க்காமலே கேட்க வேண்டியதிருக்கிறது.

பொதுமக்களுக்கு ஒதுக்கியுள்ள இடத்தில்தான் நாமும் இருக்க வேண்டுமென்றால் மேலவை உறுப்பினர்களுக்கு இம்மன்றத்திலே விசேஷ இடம் ஒதுக்கியதை ரத்துச்செய்து, அவர்களையும் பொது மக்களுடன் இருங்கள் என்று சொன்னால் அவர்கள் எப்படி அதை எடுத்துக் கொள்வார்கள்.

நேற்றைய தினம் சபையின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, பேரவைத் தலைவர் பார்வையாளர்கள் யாரையும் அனுமதிக்க வேண்டாம் என உத்தரவிட்டிருந்தீர்கள். மேலவை உறுப்பினர்கள் மாடம் அடைக்கப்பட்டுள்ளது ; ஆகையால் அவர்களும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்ற விஷயத்தை தங்கள் கவனத்திற்கு கொண்டுவந்த உடனேயே அதைத் திறந்து மேலவை உறுப்பினர்களை அழைத்துச் செல்லுமாறு மிகவும் மரியாதையுடன் தாங்கள் உத்தரவிட்டீர்கள்.

(திரு. ஓ. சுப்பிரமணியன்) [1979 மார்ச் 8

இந்நிலையில் நேற்று மேலவையில் நடந்த நிகழ்ச்சியில் அவர்கள் உரிமை பாதிக்கப்பட்டதாகவும் அதற்கு தங்களையே அவர்களின் உரிமைக்குழுவின்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மேலவையில் நடைபெற்றதைப்பற்றி இந்த அவையிலே பேச வேண்டாம். அதைத்தவிர மற்ற கருத்துக்களைச் சொல்லுங்கள்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தங்களுக்கும் இந்த மன்றத்திற்கும் மரியாதை குறைகின்ற வகையிலே அங்கே பேசியிருக்கிறார்கள். அதைத்தான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, மேலவையிலே நடைபெற்றதை இங்கே குறிப்பிட வேண்டாம் என்று கூறினீர்கள். தங்களுடைய பெருந்தன்மையை மதிக்கிறேன் - பாராட்டுகிறேன். தங்களுடைய உணர்வை புரிந்து கொள்கிறேன். ஆனால் இங்கே நடைபெற்றவைகளைப்பற்றி அங்கே விவாதித்திருக்கிறார்கள். அதனால்தான் நான் 'ரீ ஆக்ட்' பண்ணுகிறேனே தவிர, 'ஆக்ட்' பண்ணவில்லை. ஆகவே, இதையும் தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு இருக்கிற சிக்கல் ஆக்டா அல்லது ரீயாக்டா என்பதல்ல. மேலவையிலே நடைபெற்றதைப்பற்றி இந்த அவையிலே பேசாமல் இருப்பது நல்லது. அதைப்போல இந்த அவையிலே நடைபெற்றதைப் பற்றி மேலவையிலே பேசாமல் இருப்பது நல்லது.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, இந்த அவையின் உணர்வுகளை மேலவைத் தலைவருக்கு முறைப்படி தெரிவித்துக் கொள்வீர்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு ஒவ்வொரு கட்சித் தலைவரும் தங்களுடைய உணர்வுகளைச் சொல்ல வேண்டும்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, அங்கே பேசிய சில உறுப்பினர்கள் இந்த மன்றத்தின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நாங்கள் - ஆகவே, நாங்கள் சட்டமன்ற பேரவையில இருக்க தடை சொல்ல கூடாது என்பதை உரிமை

யோடு வற்புறுத்தியிருக்கிறார்கள் என்ற செய்தியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால்தான் இம்மன்றத்தின் கவுரவத்தையும், தங்களின் கவுரவத்தையும் பாதுகாக்க இப்பிரச்னையை உரிமைக் குழுவுக்கு அனுப்பி முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது ஒரு உரிமைப் பிரச்சனையா என்று எடுத்துக்கொண்டு பார்த்தால், இது உரிமைப் பிரச்னையாகாது. நான் இரண்டு அவைகளிலும் உறுப்பினராக இருந்திருக்கிறேன். மேலவையிலே இருக்கின்ற இடவசதி மிகவும் குறைவாக இருக்கிறது. இங்கே அவர்கள் வருகிறபோது அவர்கள் உட்கார இடம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு, அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த உரிமை, வாய்ப்பு தடுக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. இந்த அவையின் உறுப்பினர்களும் மேலவையில் உட்கார்ந்து, தனி இடத்தில் உட்கார்ந்து நிகழ்ச்சிகளைப் பார்வையிட போதுமான இடவசதி ஏற்படுத்தி, வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இப்போது இடவசதி இல்லை. ஆகவே, இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பாமல், இதை உரிமைப் பிரச்னை என்று கருதாமல், இரண்டு அவையின் தலைவர்களும் கலந்துபேசி, இடவசதியை ஏற்படுத்தி, இந்த மன்றத்தின் உறுப்பினர்களும் அங்கே உட்கார்ந்து பார்வையிட வசதி செய்து கொடுப்பது உகந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தின் உறுப்பினர்களின் உரிமை பாதிக்கின்ற வகையிலே மேலவையில் பேசியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) தங்களுடைய கருத்துப்படியே நம்முடைய கவுரம், மரியாதை பாதிக்கின்ற வகையில் அங்கே வாதிடுவது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தலைவர் சொல்லி விட்டார். அதற்குப் பின்னாலே நீங்கள் ஒரு கருத்தைச் சொல்கிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : இந்த அவையிலுள்ள யாரையும் அவர்கள் அவமதிப்பதாக இருக்கக்கூடாது. அங்கே நம்மை அவமதிக்கும் வகையில பேசியிருக்கிறார்கள். அப்படி பேசியிருப்பது ஒரு உரிமைப் பிரச்னைக்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் அவர்கள் சொன்ன கருத்துக்கு மறுப்பு கருத்து நீங்கள் சொல்கிறீர்களா? உரிமை மீறல் பிரச்னை ஆகாது என்று அவர் சொல்கிறார்? நீங்கள் உரிமை மீறல் பிரச்னை என்று சொல்கிறீர்கள்.

[1979 மார்ச் 8

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நான் சொல்வது இதுவல்ல. இப்படி ஒரு பிரச்னை மேலவையிலே வருகிற போது மேலவைத் தலைவரவர்கள் ஒன்று சொன்னார்கள். ''நான் சட்டமன்றப் பேரவை ஆபீஸர்ஸ் காலரியில் காலையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது அதை எதிர்த்துச் சிலர் கேள்வி கேட்டார்கள். அப்போது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எனக்காகப் பரிந்து பதில் சொன்னார்கள். ஆகவே நான் அன்றைக்கு அவமானப்படுத்தப்பட்டேன்'' என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே இப்படி ஒரு குறையை இந்த அவையைப் பற்றி அவர்கள் சொல்லியிருக்கிறார்களே, இந்த அவையின் தலைவராக இருக்கும் தாங்கள் இதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால்தான் பேராசிரியர் அவர்கள், இரு அவைத் தலைவர்களும் கலந்து பேசி ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்துங்கள் என்று சொன்னார்கள். ஆகவே இதற்குப் பிறகு இந்தப் பிரச்சினை பற்றி இங்கே ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று சொல்லி இருக்கிறேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்போது எங்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பினார்கள். அதற்கு தீர்ப்பு வழங்க வேண்டியது சபாநாயகராகிய தாங்கள். ஆனால் அதற்கு இரண்டு மூன்றுபேர் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லிவிட்டார்கள். இது முறைதானா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கருத்துக்களை எல்லோரும் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அதிலே தவறு இல்லை. நீங்களும் கருத்துச் சொல்லலாம். அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்களே தவிர தீர்ப்பு வழங்கவில்லை.

சட்டப்பேரவை விதிகள் 238, 239 வெளியார்கள் அல்லது அலுவலர்களை சட்டப் பேரவைக்குள் அல்லது அதன் மாடங்களில் அனுமதிப்பது பற்றிய விதிமுறைகளாகும். இதில் பார்வையாளர்கள் மாடங்களும் அடங்கியது. பேரவை மண்டபத்தில் பார்வையாளர் மாடங்கள் உட்பட அனுமதி வழங்குவதற்கும், மறுப்பதற்கும் பேரவைத் தலைவர் வகுக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டதாகும். இதன்படி விதிகளும் வகுக்கப்பட்டுள்ளன. இதில் மேலவை உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்குவதற்கு ஏதும்

வகை செய்யப்படவில்லை. ஆனால் அவர்களின் வசதி குறித்து பார்வையாளர் மாடங்களில் ஒருசில இருப்பிடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த மாடங்களிலும் மேலவை உறுப்பினர்களோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களோ தங்களது அடையாளச் சீட்டுகளைக் காண்பித்து அமரலாம். மாடங்களிலே பார்வையாளர்கள் யாராக இருப்பினும் பேரவையில், மேலவையில் அனுமதிக்கப்படுவதும், மறுக்கப்படுவதும் அந்தந்த அவைத் தலைவர்கள் ஏற்படுத்தும் விதிகளுக்கும், அவையின் விதிகளுக்கும் உட்பட்டதாகும்.

தேவையென்றால், நிர்வாக வசதிக்கேற்ப அனுமதி மறுப்பதும் அல்லது அனுமதி கொடுக்கப்பட்டு மாடங்களில் உள்ளவர்களை வெளியேற்றுவதும் பேரவைத் தலைவரின் உரிமையாகும். நமது அவைகளில் கட்டிட அமைப்புகள் தற்போதைய தேவைகளுக்கேற்ப அமையவில்லையாதலால் உறுப்பினர் பார்வையாளர் எல்லோருக்கும் வசதிகள் செய்து கொடுக்க இயலவில்லை.

மேலும், ஒரு அவைபற்றி மற்றொரு அவையில் உரிமைப் பிரச்சினை எழுப்புவது இரு அவைகளுக்கும் உள்ள சுமுக உறவைக் குலைப்பதாக அமையும். இதுபற்றி உறுப்பினர்கள் ஏதேனும் எழுப்ப வேண்டுமென்றால் பேரவைத் தலைவர் அறையில் அவரைச் சந்தித்து கலந்தாலோசித்து ஆவன செய்யலாம். எனவே இவ்வாறு அவையில் எழுப்புவது முறையாகாது. மேலும் இந்த மன்ற உறுப்பினர்களுக்கு மேலவையில் அதன் விவாதங்களைக் கவனிப்பதற்குத் தனியாக இடம் ஒதுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இதில் மேலெழுந்தவாரியாகக் கூட உரிமைப் பிரச்சினை எதுவும் எழவில்லை. மேலவைத் தலைவருடன் கலந்தாலோசித்து அங்கு இப்பேரவையில் உறுப்பினர்களுக்கு விவாதங்களை கவனிப்பதற்கு இடம் ஒதுக்க ஏற்பாடு செய்யலாம்.

எனவே இதில் உரிமைப் பிரச்சினை எதுவும் எழவில்லை. பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம். மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை.

[முற்பகல் 10–20]

(4) ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர் கொடுத்த தீர்மானம் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு செ. இராமலிங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர். 41 வது விதியின்கீழ் சென்ற மாதம் நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். பேரவைத் தலைவர் அவர்கள் 16–2–1979 அன்று